ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2079/7 - 2018 ජූලි මස 09 වැනි සඳුදා - 2018.07.09
*2079/7 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

### ஊவா மாகாண மாகாண சபை

*ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனங்கள்*

*1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபை சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண ஆளுநர் ஆரிய பி. ரெகவ ஆகிய நான், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்களைச் செய்துள்ளேன் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.*

1. *இலங்கை நிர்வாக சேவையின் II ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி டி. எம். வினிதா திசாநாயக்க அவர்கள், தமது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக 2018.05.02 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், ஊவா மாகாண கிராமிய அபிவிருத்திப் பணிப்பாளராக பதிற் கடமையாற்ற ;*

2. *ஊவா மாகாண ஆயுர்வேத ஆணையாளர் திரு. பீ. டபிள்யு. டபிள்யு. திசாநாயக்க அவர்கள், 2018.06.07 ஆந் திகதி முதல் 2018.06.22 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2018.06.07 ஆந் திகதி முதல் அவர் மீளத் தீவிற்கு திரும்பும் வரை, உதவி ஆயுர்வேத ஆணையாளர் திருமதி எம். பீ. எஸ். கருணாரத்ன அவர்கள், தனது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக ஊவா மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு ;*

3. *இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஆர். எம். ரீ. பி. ஹாதியல்தெனிய அவர்கள், 2018.06.10 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், தனது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக ஊவா மாகாண ஆளுநரின் செயலாளராக பதிற்கடமையாற்ற ;*

4. *இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. தயானந்த ரத்னாயக அவர்கள், உடனடியாக செயற்படும் வகையில் (2018.06.04 ஆந் திகதி முதல்) ஊவா மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் மாகாண காணி ஆணையாளராக.*

*ஆரிய பி. ரெகவ,*
*ஊவா மாகாண ஆளுநர்.*

*ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம்,*
*2018, யூலை 04.*

*07-770*

1A - PG 4107 — 57 (2018/07) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*